தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்
www.dinakani.com







| Vol: 02 | Issue: 178 | 4 Pages | 25.1.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 178 | 4 பக்கங்கள் | 25.1.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



## மத்திய அரசு பணிந்தது: டங்ஸ்டன் சுரங்க திட்டம் ரத்து குறித்து முதல்வர் கருத்து

சென்னை, ஜன.25

மதுரைமாவட்டம்அரிட்டாபட்டியில் அமைய இருந்த டங்ஸ்டன் சுரங்க திட்டத்தை நிறுத்தி வைக்க மத்திய அரசு ஏற்கனவே உத்தரவிட்டிருந்தது. நேற்று தமிழக பாஜக தலைவர் அண்ணாலை மற்றும் ஊர்த்தலைவர்கள் மத்திய அமைச்சரை சந்தித்து திட்டத்தை முழுமையாக ரத்து செய்யக்கோரி வலியுறுத்தினர். இதனை ஏற்றுக்கொண்ட மத்திய அமைச்சர் கிஷன் ரெட்டி, திட்டம் ரத்து செய்யப்படும். இதற்கான அறிவிப்பு நாளை (இன்று) அதிகாரப்பூர்வமாக வெளியாகும் என உறுதி அளித்திருந்தார்.



அதன்படி டங்ஸ்டன் சுரங்க திட்டம் ரத்து செய்யப்படுவதாக சுரங்கத்துறை அமைச்சகம் அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது.

இந்த நிலையில்தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் பக்க பதிவில் கூறியிருப்பதாவது:

★ நான் முதலமைச்சராக இருக்கும் வரை, என்னை மீறி டங்ஸ்டன் சுரங்கம் அமையாது என்று உறுதிபடத் தெரிவித்தேன்!

★ சட்டப்பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றினோம்! மக்களின் உணர்வுக்கும், மாநில அரசின் உறுதிக்கும் ஒன்றிய அரசு பணிந்துள்ளது!

★ இனி, மாநில அரசின் இசைவு பெறாமல் இத்தகைய சுரங்க ஏல அறிவிக்கைகளை ஒன்றிய அரசு வெளியிடக்கூடாது; மாநில உரிமைகளுக்கு எதிரான சட்டங்களுக்கு அ.தி.மு.க.,வும் துணைபோகக் கூடாது!

இவ்வாறு மு.க. ஸ்டாலின் எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## புத்தக கண்காட்சியை முன்னிட்டு வாசிப்பு விழிப்புணர்வு பேரணி

திருத்துறைப்பூண்டி ஜன.24

திருத்துறைப்பூண்டியில் மாடர்ன் நர்சரி, பிரைமரி மற்றும் விட்டுக்கட்டி வள்ளுவர் உதவி பெறும் தொடக்கப் பள்ளி மாணவ மாணவிகள் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

திருவாரூர்மாவட்ட நிர்வாகம் சார்பில் 3 ஆவது புத்தக திருவிழா நடைபெறுவதையொட்டி திருத்துறைப்பூண்டியில் மாடர்ன் நர்சரி பிரைமரி பள்ளி மற்றும் விட்டுக் கட்டி வள்ளுவர் உதவி பெறும் தொடக்கப்பள்ளி இணைந்து புத்தகத் திருவிழா குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி விழிப்புணர்வு பேரணியை மாடர்ன் பிரைமரி நர்சரி பள்ளி வளாகத்தில் இருந்து அண்ணாசிலை, காமராஜர் சிலை வழியாக மன்னை சாலை,

இரயில்வே நிலையம் வழியாக நகராட்சி அலுவலகம் வந்தட



நகராட்சி நிர்வாகத்தினர் வரவேற்றனர். திருத்துறைப்பூண்டி நகர் மன்றத்தலைவர் கவிதா பாண்டியன் தொடங்கி வைத்த இப்பேரணியை நகராட்சி ஆணையர்துர்கா அவர்கள் முடித்து வைத்தார். விழிப்புணர்வு பிரச்சாரத்தில்

புத்தகம் வாசிப்பது அவசியம் குறித்து விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தியும், வாசிப்பு விழிப்புணர்வு வாசகங்களை கோசமிட்டும் நகரின் முக்கிய பகுதியில் வலம் வந்தனர்.

திருவாரூரில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நடைபெறும் புத்தகத் திருவிழாவில் ஒவ்வொருவரும் தனது வீட்டில் ஒரு பகுதியில் நூலகமாக செயல்பட வேண்டும் ஒவ்வொருவரும் மாணவரும் புத்தகம் வாசிப்பதன் மூலம் போட்டி தேர்வுகள் எழுதி உயரிய பதவியை அடையலாம் என்கிற கருத்து வலியுறுத்தப்பட்டது மாணவ மாணவிகளுக்கு தேவையான புத்தகங்களை நாங்களே வாங்கி தர தயாராக உள்ளோம். நீங்கள் வாசிப்பு பழக்கத்தை உருவாக்கி கொள்ளுங்கள் என்றனர்.

பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் நூலகர் ஆசைத்தம்பி தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில், ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் நிறுவனத் தலைவர் முனைவர் துரை ராயப்பன், துணைத்தலைவர் விஜயராஜ் பொருளாளர் மேஜிக் அகிலன், மாடர்ன் பிரைமரி நர்சரி பள்ளியின் முதல்வர் தீபா ராணி, விட்டு க்கட்டி பள்ளி ஆசிரியை மணிமலர், லயன்ஸ் செயலாளர் பாலகிருஷ்ணன், முன்னாள் லயன்ஸ் தலைவர் வேதமணி, பொருளாளர் ரகுராமன், நகர் மன்ற உறுப்பினர் மாயா சமூக ஆர்வலர் கமல், கவிஞர் இளைய குமார், ஆசிரியர்கள் வீரகுமாரி, அபிராமி, திவ்யா, ராமஜெயந்தி, ஆர்த்தி, சரண்யா, விஜயரேகா, சுபா, விஜயலட்சுமி உள்ளிட்ட மாணவ மாணவியர் ஆசிரியர்கள் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். லயன்ஸ் சங்கத் தலைவரும், பள்ளியின் தாளாளர் முருகானந்தம் அவர்கள் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்திருந்தார்.

## புளியங்குடியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை கழகக் கல்லூரி சார்பில் சாலை விழிப்புணர்வு பேரணி

புளியங்குடி, ஜன.25

புளியங்குடியில்ம னோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி சார்பில் சாலை விழிப்புணர்வு பேரணி நிகழ்வின் ஏற்பாடு புளியங்குடி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி மற்றும் தென்காசி மாவட்ட மை பாரத் நேரு யுவ கேந்திரா இணைந்து சாலை விழிப்புணர்வு பேரணி ஏற்பாடு செய்தது.

தலைமை கல்லூரி முதல்வர்




முனைவர் கண்ணன் தலைமை தாங்கினார். முன்னிலை திருநெல்வேலி மாவட்ட நேரு யுவ கேந்த்ரா மாவட்ட இளைஞர் நல அதிகாரி . ஞானச்சந்திரன் முன்னிலை வகித்தார். வரவேற்புரை நாட்டு நலப் பணித்திட்ட அதிகாரி முனைவர் கல்யாணசுந்தரிவரவேற்புரை ஆற்றினார்.

சிறப்பு விருந்தினர்பு ளியங்குடி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் . வெங்கடேசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேரணியை துவக்கி வைத்தார்.

பங்கேற்பாளர்புளியங்குடி காவல் ஆய்வாளர் சியாம் சுந்தர் மற்றும் உதவி ஆய்வாளர் மாடசாமி உள்ளிட்ட காவல்துறை அதிகாரி. கல்லூரியின் அனைத்து பேராசிரியர் மற்றும் மாணவமாணவி கலந்து கொண்டார்கள்.

## வேங்கைவயல் வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு ஒப்படைக்க வேண்டும்: திருமா



சென்னை, ஜன.25

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

வேங்கைவயல் வழக்கில் தமிழ்நாடு காவல்துறை பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த மூவரை குற்றவாளிகள் எனக் கூறியிருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. காவல்துறையின் குற்றப்பத்திரிகையை விசாரணை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளக் கூடாது; மேல்விசாரணைக்கு ஆணையிட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

வேங்கைவயல் வழக்கில் ஐகோர்ட்டில் தமிழ்நாடு காவல்துறையின்சி.பி.சி.ஐ.டிசார்பில்இன்று பிரமாண பத்திரமொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் இந்த வழக்கில் கடந்த 20ம் தேதி குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விட்டதாகவும், மூன்று பேர் குற்றவாளிகளாக அடையாளம் காணப் பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. முரளி ராஜா, சுதர்சன், முத்துக்கிருஷ்ணன் ஆகிய மூன்று பேர் குற்றவாளிகள் என தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த மூவரும் பட்டியல் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். பட்டியல் சமூகத்தினர் குடிக்கும் தண்ணீரில் மலம் கலந்த தாகத்தான் வழக்கு. அந்த வழக்கில் பட்டியல் சமூகத்தைச் சேர்ந்தவர்களே குற்றவாளிகள் என்று காவல் துறை கூறுவது அதிர்ச்சி அளிக்கிறது. இது ஏற்கத்தக்கதாக இல்லை.

எனவே, சி.பி.சி.ஐ.டி சமர்ப்பித்திருக்கும் குற்றப் பத்திரிகையை விசாரணை நீதிமன்றம் ஏற்கக் கூடாது எனவும் மேல்விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் எனவும் வலியுறுத்துகிறோம். வேங்கைவயலில் குடிநீரில் மனிதக் கழிவு கலக்கப்பட்ட குற்றம் நிகழ்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. ஆரம்ப நிலையிலேயே இந்த வழக்கில் காவல் துறை பட்டியல் சமூகத்தினருக்கு எதிராக நடந்து கொள்கிறது என்ற குற்றச்சாட்டு எழுந்தது. அதனால் தான் சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று கோரிக்கைகள் எழுந்தன.

அந்தச் சூழ்நிலையில்தான் இந்த வழக்கை 14.01.2023அன்று சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றி தமிழ்நாடு அரசு ஆணையிட்டது.

சி.பி.சி.ஐ.டி. இந்த வழக்கில் விசாரணையை மேற்கொண்ட நிலையில்கூட கடந்த இரண்டு ஆண்டுகளாகக் குற்றவாளிகளை அடையாளம்காண்பதில்மெத்தனமாகவே இருந்தது. ஐகோர்ட்டு ஒவ்வொரு முறையும் இதில் கடுமையாக அறிவுறுத்தியபிறகும்கூட குற்றவாளிகள் யார்எனக்காவல்துறைகூறவில்லை. தற்போது இதுதொடர்பாக சி.பி.ஐ. விசாரணை கேட்ட வழக்குகள் சென்னை ஐகோர்ட்டில் விசாரணைக்கு வந்த நிலையில், சி.பி.ஐ. விசாரணைக்குசென்னைஐகோர்ட்டு உத்தரவிட்டுவிடுமோ என்ற அய்யத்தில், அதைத் தடுப்பதற்காகவே இந்தக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு இருப்பதாகக் கருத வேண்டியுள்ளது.

உண்மையான குற்றவாளிகளைக் காப்பாற்றும் நோக்கோடு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. எனவே, இந்த வழக்கை விசாரித்து வரும் விசாரணை நீதிமன்றம் சி.பி.சி.ஐ.டி. தாக்கல் செய்திருக்கும் குற்றப்பத்திரிகையை ஏற்கக் கூடாது என வலியுறுத்துகிறோம். அத்துடன், தமிழ்நாடு அரசே முன்வந்து இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு ஒப்படைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.



**அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**
**தந்நோய்போற் போற்றாக் கடை**

**விளக்கம்:**
**மற்ற உயிரின் துன்பத்தை தன் துன்பம் போல் கருதிக் காப்பாற்றா விட்டால் பெற்றுள்ள அறிவினால் ஆகும் பயன் உண்டோ.**

## 1,700 ஊழியர்களை பணிநீக்கம் செய்யும் அமேசான்




ஒட்டாவா, ஜன.25

கொரோனா தொற்றின்போது உலகம் முழுவதும் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. உலகின் முன்னணி நிறுவனங்கள் கூட இதனை சமாளிக்க முடியாமல் திணறின. எனவே சம்பளம் குறைப்பு, ஊழியர்கள் பணி நீக்கம் போன்ற நடவடிக்கைகளை நிறுவனங்கள் எடுத்து வருகின்றன.

இணைய வர்த்தகத்தில் முன்னணி நிறுவனமான அமேசானுக்கு உலகம் முழுவதும் பல கிளை அலுவலகங்கள் அமைந்துள்ளன. ஆனால் கனடாவின் கியூபெக் மாகாணத்தில் உள்ள பல கிளைகள் நட்டத்தில் இயங்கி வருகின்றன. எனவே அங்குள்ள 7 அலுவலங்களை மூடுவதாக அமேசான் நிறுவனம் அறிவித்துள்ளது. இதன்மூலம் அங்கு வேலை பார்த்து வரும் 1,700 பேர் பணி நீக்கம் செய்யப்பட உள்ளனர். நிறுவனத்தின் இந்த அறிவிப்பு ஊழியர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## டிரம்ப் உத்தரவால்... டாக்டர்களை தேடி ஓடும் தம்பதிகள்

வாஷிங்டன், ஜன.25

அமெரிக்காவில் கடந்த ஆண்டு நவம்பர் 5ந் தேதி ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் டிரம்ப், பெரும்பான்மைக்கு தேவையான வாக்குகளைவிட அதிக வாக்குகளை கைப்பற்றி வெற்றி பெற்று அமெரிக்க ஜனாதிபதியாக தேர்வானார். அமெரிக்க அரசியலமைப்பின்படி கடந்த 20ந்தேதி இரவு 10.30 மணிக்கு அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியாக அவர் பதவியேற்றார்.

இதன்பின்னர் அவர் பல உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார். அவற்றில், பிறப்பால் அமெரிக்க குடியுரிமை கிடைப்பதற்கு விதிக்கப்பட்ட தடையும் ஒன்றாகும்.

டிரம்ப் பிறப்பித்த உத்தரவின்படி, பிப்ரவரி 20ந்தேதிக்கு பின்னர் பிறக்கும் குழந்தைகளுக்கு இனி அமெரிக்க குடியுரிமை கிடையாது என்ற உத்தரவும் அடங்கும். டிரம்பின் குடியுரிமை காலக்கெடு உத்தரவால் தம்பதிகள் பலரும் மருத்துவமனைகளுக்கு படையெடுத்து வருகின்றனர். அந்த நாளுக்கு முன்னர் குழந்தைகளை பெற்று கொள்ள கர்ப்பிணிகள் முயன்று வருகின்றனர்.

இதற்காக, அமெரிக்காவில் வசிக்கும் தம்பதிகள் டாக்டர்களை தொடர்பு கொண்டு அந்த நாளுக்கு முன்பு குழந்தை பிறக்கும் வகையில் சிசேரியன் அறுவை சிகிச்சை மேற்கொள்ளும்படி வலியுறுத்தி வருகின்றனர். பலரும் டாக்டர்களை தொடர்பு கொண்டு முன்பதிவும் செய்து வருகின்றனர்.

பிப்ரவரி 19ந்தேதிக்கு பின்னர், அமெரிக்க குடிமக்கள் அல்லாத தம்பதிகளுக்கு பிறக்கும் குழந்தைகள், இயற்கையாகவே அமெரிக்க குடிமக்கள் ஆவது என்பது இனி முடியாது. இதனால், 8 மாதம் மற்றும் 9 மாத கர்ப்பிணியாக இருக்கும் பெண்கள் பலரும் டாக்டர்களை தேடி ஓடுகின்றனர். 7 மாத கர்ப்பிணிகள் கூட இதுபோன்று வருகிறார்கள் என டாக்டர்கள் கூறுகின்றனர்.

இதேபோன்று அமெரிக்க குடியுரிமை அல்லாத பெற்றோரிடம் கிரீன் கார்டு இல்லாவிட்டால், அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கும் அமெரிக்க குடியுரிமை கிடைக்காது. இதனால், கிரீன் கார்டு பெறுவதற்காகவும், பலரும் வரிசையில் காத்திருக்கின்றனர்.

அமெரிக்காவில் எச்1பி மற்றும் எல்1 ஆகிய தற்காலிக விசாக்களுடன் ஆயிரக்கணக்கான இந்தியர்கள் பணியாற்றி வருகின்றனர். அமெரிக்கா செல்வதற்காக நிறைய விசயங்களை தியாகம் செய்து விட்டு சென்றால், கடைசியில் கதவை சாத்தியது போன்று நிலைமை உள்ளது என பலரும் வேதனை தெரிவித்து உள்ளனர். அமெரிக்கா செல்லும் பலருடைய கனவு, டிரம்ப் உத்தரவால் இனி நனவாவது கடினம் என்ற சூழ்நிலை ஏற்பட்டு உள்ளது.

## 'செயற்கை நுண்ணறிவு பல வேலைகளை செய்தாலும் மனித கைகளும், இதயமும் தேவை' மத்திய மந்திரி




பெர்ன், ஜன.25

சுவிட்சர்லாந்து நாட்டின் தாவோஸ் நகரில் நடைபெற்ற உலக பொருளாதாரமன்றத்தின்வருடாந்திரகூட்டத்தில்மத்தியதிறன்மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை மந்திரி ஜெயந்த் சவுத்ரி கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

"செயற்கை நுண்ணறிவு ஏற்கனவே பல்வேறு வேலைகளை செய்து கொண்டிருக்கலாம். ஆனால் உலகிற்கு இன்னும் மனித கைகளும், இதயமும், மூளையும் தேவைப்படுகிறது. செயற்கை நுண்ணறிவு உருவமற்றது. இந்தியாவில் அதன் பெயர் உண்மையானது அல்ல என்று பொருள் தரும் வகையில் 'நக்லி'(naqli) என்று அழைக்கப்படுகிறது.

எதிர்கால தேவைகளுக்கு ஏற்ப இளம் திறமையாளர்களை உருவாக்கும் முயற்சிகளைஇந்தியாஏற்கனவேசெயல்படுத்திவருகிறது.எதிர்காலத்தில் தேவைப்படும் திறன்களை இளைய தலைமுறையினருக்கு பள்ளி அளவிலேயே வழங்குவது நமது கடமையாகும்.

இந்தியாவில் இருந்து ஒரு பயிற்சி பெற்ற தொழிலாளர் ஐரோப்பாவிற்கு வரும்போது, அவருக்கு எதுவும் தெரியவில்லை என்று கூறக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுவதை நான் விரும்பவில்லை. ஒவ்வொரு நாளும் நமது திறன்களை மறுஆய்வு செய்யக்கூடிய நாளாகவே நான் பார்க்கிறேன்."

இவ்வாறு மத்திய மந்திரி ஜெயந்த் சவுத்ரி தெரிவித்தார்.

# கோவை: நடைபயிற்சிக்கு சென்ற முதியவர், காட்டு யானை தாக்கி பலி



கோவை ஜன.25

கோவை துடியலூர் அருகே தாளியூர் பகுதியில் மளிகை கடை வைத்து நடத்தி வருபவர் நடராஜ். இவர் அதிகாலை தடாகம் சாலையில் நடைபயிற்சி மேற்கொள்வது வழக்கம். இன்று வழக்கம் போல அதிகாலை 5.40 மணி அளவில் நடராஜ் நடைபயிற்சி சென்றார். அப்போது வனப்பகுதியில் இருந்து உணவு தேடி தடாகம் சாலைக்கு வந்த காட்டு யானை, நடைபயிற்சி சென்று கொண்டிருந்த நடராஜன் தந்ததால் குத்தி துதிக்கையால் தூக்கி வீசி உள்ளது.

இதில் நடராஜ் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். காட்டு யானைகள் ஊருக்குள் வராமல் தடுக்கக்கோரி பொதுமக்கள் மற்றும் விவசாய சங்கத்தினர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

பிறகு, அங்கு வந்த தடாகம் காவல்துறையினர் மற்றும் வனத்துறையினர் பேச்சுவார்த்தை நடத்தினர். அதேபோல, அங்கு வந்த கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.ஜி அருண்குமார், நடராஜ் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியதோடு, உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்த பிறகு, போராட்டம் கைவிடப்பட்டது. இதனால், அங்கு சுமார் 2 மணி நேரமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# டங்ஸ்டன் சுரங்க திட்டம் ரத்து: அரிட்டாப்பட்டி மக்கள் பட்டாசு வெடித்து கொண்டாட்டம்



மதுரை, ஜன.25


மதுரை மேலூர் அருகே அரிட்டாப்பட்டி, வெள்ளரிப்பட்டி, நாயக்கர்பட்டி, அ.வல்லாளப்பட்டி உள்ளிட்ட பல கிராமங்களில் டங்ஸ்டன் கனிம சுரங்கம் அமைக்க தனியார் நிறுவனத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. அதற்கு அரிட்டாப்பட்டி உள்ளிட்ட மேலூர் பகுதியிலுள்ள சுமார் 40க்கும் மேற்பட்ட கிராமங்களிலும் விவசாயிகள், மக்கள் எதிர்ப்பு தெரிவித்து தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில், டங்ஸ்டன் சுரங்க திட்டத்தை ரத்து செய்வதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இதனை அரிட்டாப்பட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த மக்கள் பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் கொண்டாடி வருகின்றனர். திட்டம் ரத்துசெய்யப்பட்டது குறித்து அரிட்டாப்பட்டி கிராம மக்கள் கூறியதாவது;

எங்களின் உணர்வுகளை புரிந்துகொண்டு மத்திய அரசு திட்டத்தை கைவிட்டுள்ளது. நாங்கள் மிகவும் மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் உள்ளோம். அரிட்டாப்பட்டி மக்களுக்கு இது ஒரு மறக்க முடியாத வெற்றி. நாங்கள் எங்களது வாழ்நாள் முழுவதும் நிம்மதியாக வாழ வழி செய்துள்ளனர். இதற்காக மத்திய அரசுக்கும், முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும், ஊடக நண்பர்களுக்கும் நன்றி. அரிட்டாப்பட்டி மக்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்த மற்ற கிராம மக்களுக்கும் நன்றி

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# டெலிவரி ஆட்களை கண்காணிக்க கோரிய வழக்கு: டி.ஜி.பி.க்கு சென்னை ஐகோர்ட்டு நோட்டீஸ்



சென்னை, ஜன.25

உணவுப் பொருட்கள் மற்றும் மளிகை பொருட்களை வீடுகளுக்கே வந்து டெலிவரி செய்யும் ஸ்விகி, சொமேட்டோ உள்ளிட்ட நிறுவனங்களின் டெலிவரி ஆட்கள் போல் நடித்து குற்ற செயல்களில் ஈடுபடுவது அதிகரித்து வருவதால், டெலிவரி நபர்களை கண்காணிக்க விதிகளை வகுக்க தமிழக டி.ஜி.பி.க்கு உத்தரவிட வேண்டும் என்ற கோரி சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவில், உணவு மற்றும் மளிகை பொருட்கள் டெலிவரி செய்யும் நபர்களுக்கு சீருடை இருந்தாலும் கூட, அவர்களின் பெயர், முகவரி உள்ளிட்ட விவரங்களுடன் கூடிய அடையாள அட்டை ஏதும் அவர்களுக்கு இல்லை. பெரும்பாலும் டெலிவரி செய்யும் நபர்கள் ஹெல்மெட் அணிந்து வருவதால் அவர்களை அடையாளம்காண்பதுஇயலாததாக ஆகி விடுகிறது. சென்னையில் முக்கிய அரசியல் கட்சித் தலைவர் ஒருவர், உணவு டெலிவரி நிறுவன சீருடையை அணிந்து வந்தவர்களால் கொலை செய்யப்பட்டுள்ளார். டெலிவரி ஆட்கள் போல் நடித்து குற்ற செயல்களில் ஈடுபடுவதை தடுக்கும் வகையில், டெலிவரி நபர்களை கண்காணிக்க, முறைப்படுத்த விதிகளை வகுக்கும்படி, தமிழக காவல்துறை டி.ஜி.பி.க்கு மனு அனுப்பியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அந்த மனுவை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு நீதிபதி, வழக்கு தொடர்பாக நான்கு வாரங்களுக்குள் பதிலளிக்கும்படி தமிழக டி.ஜி.பி.க்கும், ஸ்விக்கி, சொமேட்டோ, டன்ஸோ, செப்டோ போன்ற டெலிவரி நிறுவனங்களுக்கும் உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்தார்.

# தமிழகத்தை உலுக்கிய இரட்டை ஆணவக் கொலை: கைதான வினோத் குற்றவாளி என தீர்ப்பு



கோவை, ஜன.25

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில், கடந்த 2019ம் ஆண்டு சாதிமறுப்பு திருமணம் செய்து கொண்ட கனகராஜ் வர்ஷினி பிரியா ஆகியோரை கொலை செய்த சம்பவத்தில், கைது செய்யப்பட்ட கனகராஜின் சகோதரர் வினோத்குமார் குற்றவாளி என்று கோவை எஸ்.சி.,எஸ்.டி., சிறப்பு நீதிமன்றம் இன்று தீர்ப்பு வழங்கி உள்ளது.

கொலை வழக்கில் கைதான நான்கு பேரில் மூன்று (கந்தவேல், அய்யப்பன், சின்னராஜ்) பேர் விடுவிக்கப்படுவதாகவும், ஆணவப் படுகொலை வழக்கில் குற்றவாளிக்கான தண்டனை விவரங்கள் வரும் 29ம் தேதி வெளியிடப்படும் என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இரட்டை ஆணவப் படுகொலை வழக்கில், குற்றவாளி என அறிவிக்கப்பட்டிருக்கும் வினோத்குமாருக்கு அதிகபட்சமாக மரண தண்டனை வரை வழங்கப்படலாம் என்பதால், தண்டனை விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்று நீதிமன்றம் கூறியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# 9 குழந்தைகளை பெற்ற பெண் மீண்டும் கர்ப்பம்

நாமக்கல், ஜன.25

நாமக்கல் அருகே மல்லசமுத்திரத்தில் 9 குழந்தைகளை பெற்ற பெண் மீண்டும் கர்ப்பமானதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. கருவை கலைக்க மறுத்ததால் சுகாதாரத்துறையினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். நாமக்கல் மாவட்டம் மல்லசமுத்திரம் பேரூராட்சிக்கு உட்பட்ட பெரிய கொல்லப்பட்டியை சேர்ந்தவர் கோபி (வயது 40). கூலித்தொழிலாளி. இவரது மனைவி சங்கீதா (35). இவர்களுக்கு கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது.

சங்கீதா அடுத்தடுத்து 9 குழந்தைகளை சுக பிரசவத்தில் வீட்டிலேயே பெற்று எடுத்து உள்ளார். இதில் ஒரு குழந்தை இறந்து விட்டது. ஒரு குழந்தையை தத்து கொடுத்து விட்டனர். மீதமுள்ள 7 குழந்தைகளை வளர்த்து வருகின்றனர். தற்போது சங்கீதா மீண்டும் கர்ப்பம் ஆனார்.

இது குறித்து தகவல் அறிந்த அவர்களது உறவினர்கள், உடல்நிலை மோசமாகி விடும் என்பதால் கர்ப்பத்தை கலைத்துவிடு என்று கூறி உள்ளனர்.

இதை தொடர்ந்து மல்லசமுத்திரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று கருக்கலைப்பு செய்வதற்கான முதல் கட்ட சிகிச்சையை எடுத்து உள்ளார். இதற்கிடையே திடீரென மனம் மாறிய சங்கீதா, மீண்டும் மாத்திரையை எடுத்து கொள்ள மறுத்துவிட்டதாக கூறப்படுகிறது. இது குறித்து மல்லசமுத்திரம் வட்டார மருத்துவ அலுவலர் பிரசாந்த் போலீசில் புகார் செய்தார்.

இதையடுத்து சங்கீதாவை போலீசார் சமரசம் செய்து, கருக்கலைப்பு செய்வதற்காக நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்சில் அழைத்து வந்தனர். அங்கு சங்கீதா டாக்டர்களுக்கு போதுமான ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. குறிப்பாக பிரசவ வார்டுக்கு உள்ளே செல்ல மறுத்து விட்டார்.

அவரை சுகாதாரத்துறை அதிகாரிகள் மற்றும் போலீசார் எவ்வளவோ சமரசம் செய்து பார்த்தனர். இருப்பினும் அவர் விடாப்பிடியாக இருந்து கருக்கலைப்புக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. எனவே வேறு வழியின்றி நேற்று அவரை மீண்டும் வீட்டுக்கு அனுப்பி விட்டனர்.

தற்போது சங்கீதா 2 மாத கர்ப்பமாக இருப்பதாக கூறப்படுகிறது. ஏற்கனவே 9 குழந்தைகளை பெற்றெடுத்த சங்கீதா, தற்போது மீண்டும் கர்ப்பமாகி குழந்தை பெறுவதற்கு தயாராகி வருவது சுகாதாரத்துறையினர் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறுகையில், சங்கீதா ஏற்கனவே 9 குழந்தைகளை சுக பிரசவத்தில் வீட்டிலேயே பெற்று உள்ளார். தற்போது மீண்டும் கர்ப்பம் அடைந்து உள்ளார். அதை கலைக்க குடும்பத்தினர் மூலமாகவும், போலீசார் மூலமாகவும் கவுன்சிலிங் கொடுத்து வருகிறோம். ஆனால் அவர் ஏற்க மறுத்து வருகிறார். தொடர்ந்து அவருக்கு கவுன்சிலிங் கொடுத்து கருவை கலைக்க முயற்சி மேற்கொண்டு வருகிறோம் என்றனர்.



தென்காசி மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் தேசிய வாக்காளர் தினத்தினை (2025) முன்னிட்டு வாக்களிப்பது போல் எதுவும்மில்லை நான் நிச்சயமாக வாக்களிப்பேன் "/"Nothing like Voting. I vote for sure " வாக்காளர் தினத்தினை சிறப்பாக கொண்டாடுவதற்கான முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ. கே.கமல் கிஷோர் தலைமையில் நடைபெற்றது

# பழனி முருகன் கோவில் ரோப் காருக்கு ரூ.26½ லட்சத்தில் புதிய பெட்டிகள்



பழனி, ஜன.25

தமிழ் கடவுள் முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் 3ம் படைவீடாக பழனி முருகன் கோவில் விளங்குகிறது. இந்த கோவிலுக்கு தரிசனம் செய்ய தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். தைப்பூச திருவிழா அடுத்த மாதம் (பிப்ரவரி) 5ந்தேதி தொடங்க உள்ளது. இதனை முன்னிட்டு தற்போதே பல்வேறு ஊர்களில் இருந்து பக்தர்கள் பாதயாத்திரையாக பழனிக்கு வந்த வண்ணம் உள்ளனர்.

இதற்கிடையே பழனி மலைக்கோவிலுக்கு பக்தர்கள் செல்ல படிப்பாதை, யானை பாதை பிரதான வழிப்பாதைகளாக உள்ளன. மேலும் மலைக் கோவிலுக்கு பக்தர்கள் விரைவாக செல்வதற்காக மின்இழுவை ரெயில்கள் மற்றும் ரோப் கார் இயக்கப்பட்டு வருகிறது. மின் இழுவை ரெயில் அடிவாரத்தில் இருந்து மலைக் கோவில் செல்ல 8 நிமிடம் ஆகும். ஆனால் ரோப் காரில் 3 நிமிடத்தில், அதுவும் பழனி மலையின் இயற்றை அழகை பார்த்து ரசித்தபடி செல்லலாம். இதனால் பெரும்பாலான பக்தர்களின் தேர்வாக ரோப் கார் உள்ளது.

பழனி அடிவாரத்தில் இருந்து மலைக்கோவிலுக்கு செல்வதற்கு ஒரு ரோப் காரும், அதேபோல் மலைக்கோவிலில் இருந்து அடிவாரத்துக்கு செல்வதற்கு மற்றொரு ரோப் காரும் இயக்கப்படுகிறது. இந்த ரோப் கார்களில் தலா 5 பெட்டிகள் பொருத்தப்பட்டிருக்கும். ஒரு பெட்டியில் 3 பக்தர்கள் பயணம் செய்யலாம்.

இந்தநிலையில் பழனி முருகன் கோவிலில் இயக்கப்படும் ரோப் காரில் பழைய பெட்டிகளை அகற்றிவிட்டு புதிய பெட்டிகள் பொருத்த கோவில் நிர்வாகம் சார்பில் முடிவு செய்யப்பட்டது. இதற்காக மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்திடம் இருந்து புதிய ரோப் கார் பெட்டிகள் வாங்கப்பட்டன. முதற்கட்டமாக 5 பெட்டிகள் லாரி மூலம் கொல்கத்தாவில் இருந்து நேற்று பழனிக்கு கொண்டுவரப்பட்டது. பின்னர் அடிவாரத்தில் உள்ள ரோப் கார் நிலையத்தில் 5 பெட்டிகளும் கிரேன் எந்திரம் மூலம் இறக்கி வைக்கப்பட்டன.

இதுகுறித்து கோவில் அதிகாரிகள் கூறுகையில், "பழனி முருகன் கோவில் ரோப் காருக்கு புதிய பெட்டிகள் பொருத்த முடிவு செய்யப்பட்டு, கொல்கத்தாவில் உள்ள நிறுவனத்தில் 10 புதிய பெட்டிகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வந்தது. ஒரு பெட்டியின் எடை 290 கிலோ. ஒரு பெட்டியின் மதிப்பு ரூ.2 லட்சத்து 65 ஆயிரம் ஆகும். 10 பெட்டிகளின் மொத்த மதிப்பு ரூ.26 லட்சத்து 50 ஆயிரம் ஆகும். முதற்கட்டமாக 5 பெட்டிகள் வந்துள்ளது. விரைவில் மீதியுள்ள 5 பெட்டிகள் வந்துவிடும். அவை வந்தபிறகு ரோப்காரில் பழைய பெட்டிகள் அகற்றப்பட்டு புதிய பெட்டிகள் பொருத்தி சோதனை ஓட்டம் நடைபெறும். அதன் பிறகு பக்தர்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்" என்றனர்.


# டான்செட், சீட்டா நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம் அண்ணா பல்கலை. தகவல்

சென்னை, ஜன.25

தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் கல்லூரிகள், தனியார் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு இடங்களில், எம்.பி.ஏ., எம்.சி.ஏ. ஆகிய முதுநிலை பட்டப்படிப்புகளுக்கு அண்ணா பல்கலைக்கழகத்தின் தமிழ்நாடு பொது நுழைவுத் தேர்விலும் (டான்செட்), எம்.இ., எம்.டெக்., எம்.பிளான்., எம்.ஆர்க் ஆகிய முதுநிலை என்ஜினீயரிங் பட்டப்படிப்பில் சேர பொது என்ஜினீயரிங் நுழைவுத் தேர்விலும் (சீட்டா) தேர்ச்சி பெறுவது கட்டாயம். இந்த தேர்வை, அண்ணா பல்கலைக்கழகம் நடத்தி வருகிறது.

அந்த வகையில், 2025 26ம் கல்வியாண்டுக்கான 'டான்செட்' நுழைவுத் தேர்வு வருகிற மார்ச் மாதம் 22ந்தேதி நடைபெறுகிறது. அதேபோல், சீட்டா நுழைவுத் தேர்வு மார்ச் மாதம் 23ந்தேதி நடைபெற உள்ளது. டான்செட் மற்றும் சீட்டா நுழைவுத் தேர்வுகளுக்கான ஆன்லைன் விண்ணப்ப பதிவு தொடங்குகிறது. இளநிலை பட்டப்படிப்பு முடித்த அல்லது இறுதி செமஸ்டர் தேர்வு எழுதும் மாணவர்கள் டான்செட், சீட்டா நுழைவுத் தேர்வுக்கு https://tancet.annauniv.edu என்ற இணையதளத்தில் அடுத்த மாதம் (பிப்ரவரி) 21ந்தேதி வரை விண்ணப்பிக்கலாம் என அண்ணா பல்கலை,யின் நுழைவுத் தேர்வு துறை செயலாளர் ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் 476 மெட்ரிக் டன் குப்பைகள் அகற்றம்



சென்னை, ஜன.25

சென்னை மாநகரை தூய்மையான நகரமாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மாநகராட்சி பல்வேறு கட்ட தூய்மை பணிகளை மேற்கொண்டு வருகிறது.

பூங்காக்கள், சுரங்கப்பாதைகள், மேம்பாலங்கள், பஸ் நிழற்கூடங்கள் போன்றவற்றில் தீவிர தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு குப்பை மற்றும் கட்டிட கழிவுகள் அகற்றப்பட்டன.

இதைத் தொடர்ந்து பஸ் போக்குவரத்து உள்ள சாலைகள், நடைபாதைகளில் உள்ள குப்பைகள் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள வாகனங்கள், கடைகள் போன்றவற்றை அகற்றும் தீவிர தூய்மை பணிகள் கடந்த 21ந்தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. கடந்த 3 நாட்களில் 476 மெட்ரிக் டன் குப்பை மற்றும் கட்டிட கழிவுகள் அகற்றப்பட்டன. இரவு தூய்மை பணியில் 450க்கும் மேற்பட்ட பணியாளர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

ஓ.எம்.ஆர். பிரதான சாலை, ஒக்கியம் பஸ் நிழற் கூடம், நடைபாதைகள், தண்டையார் பேட்டை, அம்பத்தூர் மண்டலங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் தூய்மை பணிகள் நடந்தன. இரவு நேரத்தில் நடப்பதால் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் துரிதமாக நடைபெற்றது.

மாநகராட்சி மேயர் பிரியா, கமிஷனர் குமரகுருபரன் மற்றும் மண்டல அலுவலர்கள் தூய்மை பணிகளை இரவில் ஆய்வு செய்து தீவிரப்படுத்தினார்கள். மாநகர பஸ்கள் செல்லும் 100 வழித்தடங்களில் தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு தூய்மை பணி 27ந்தேதி வரை நடைபெறுகிறது.

# சிங்கப்பூரில் இருந்து பொங்கல் கொண்டாட ஊருக்கு வந்த வாலிபர் வெட்டிக்கொலை: சிவகங்கை வாலிபர் சரண்



புதுக்கோட்டை, ஜன.25

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே உள்ள பி.அழகாபுரி கிராமத்தைச் சேர்ந்தவர் சசிகுமார் (வயது 25). இவர் சிங்கப்பூரில் பணியாற்றி வந்தார். பின்னர் கடந்த 10 நாட்களுக்கு முன்னர் பொங்கல் கொண்டாட சொந்த ஊர் திரும்பினார்.

நேற்று இரவு வீட்டில் இருந்த சசிகுமாரை மர்மநபர் ஒருவர் சரமாரியாக அரிவாளால் வெட்டி படுகொலை செய்து விட்டு தப்பிச் சென்றார்.

இது குறித்து தகவல் அறிந்த திருமயம் போலீசார் விரைந்து சென்று உடலை மீட்டு வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில், சிவகங்கை மாவட்டம் வடக்கு இளையாத்தங்குடி பகுதியைச் சேர்ந்த வெற்றிவேல் (23) என்பவர் மஞ்சுவிரட்டு முன் விரோதம் காரணமாக சசிகுமாரை வெட்டி படுகொலை செய்தது தெரிய வந்தது.

இதற்கிடையே கொலையாளி வெற்றிவேல் சிவகங்கை மாவட்டம் கீழ சேவல்பட்டி காவல் நிலையத்தில் சரணடைந்தார்.

இதுகுறித்து தகவல் அறிந்த திருமயம் போலீசார் சரணடைந்த வெற்றிவேலிடம் தீவிர விசாரணை நடத்தினர். இதில் மஞ்சு விரட்டு முன் விரோதத்தில் சசிகுமாரை கொலை செய்ததை ஒப்புக்கொண்டார்.

இது தவிர்த்து வேறு ஏதேனும் காரணங்கள் உள்ளதா? இந்த கொலையில் வேறு நபர்களுக்கு தொடர்பு உள்ளதா என பல கோணங்களில் விசாரணை நடந்து வருகிறது.

மஞ்சுவிரட்டு முன் விரோதத்தில் வெளிநாட்டில் இருந்து ஊர் திரும்பிய வாலிபர் கொலை செய்யப்பட்ட சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# துறைமுகம் மதுரவாயல் பறக்கும் சாலை பணி மீண்டும் தொடங்கியது



சென்னை, ஜன.25

சென்னை துறைமுகம் மதுரவாயல் இடையே உயர்மட்ட மேம்பாலம் கட்ட கடந்த 2009ம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் முடிவு செய்யப்பட்டது. இந்த திட்டம் கூவம் ஆற்றின் வழியே செயல்படுத்தும் பணி தொடங்கியது.

ஆனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்றவுடன் கூவம் நதியில் அமைக்கப்படும் பறக்கும் சாலை திட்டத்தால் நதியின் நீரோட்டம் பாதிக்கப்படும் எனக் கூறி தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைந்த உடன் பறக்கும் சாலை திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. ரூ.5509 கோடியில் மதுரவாயல் துறைமுகம் பறக்கும் சாலை திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதற்கிடையில் இந்த திட்டத்திற்கு கடந்த ஆண்டு தேசிய பசுமை தீர்ப்பாயம் விதிக்கப்பட்ட தடையை நீக்கியது. இதைத் தொடர்ந்து கூவம் ஆற்றின் குறுக்கே மதுரவாயல் துறைமுகம் பறக்கும் சாலை பணி மீண்டும் தொடங்கியது. தீர்ப்பாயத்தின் அனுமதியை தொடர்ந்து இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் கட்டுமான பணியை தொடங்கி உள்ளது.

கடந்த ஆண்டு கூவம் ஆற்றங்கரையில் குறிப்பாக அமைந்தகரை அருகே வெள்ள அபாயத்தை உணர்த்தும் வகையில் குப்பைகள் கொட்டப்படுவதை அறிந்து தேசிய பசுமை தீர்ப்பாயம் தேவையான சுற்றுச்சூழல் அனுமதிகள் உள்ளதா என்பதை சரிபார்க்க அரசு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தியது.

தமிழக நீர்வளத்துறை, மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவை இது தொடர்பான விரிவான அறிக்கைகளை தீர்ப்பாயத்திற்கு சமர்ப்பித்தது. பாடிக்குப்பம் மற்றும் செயின்ட் ஆண்ட்ரூஸ் பாலம் இடையே உள்ள நீளம் உள்பட பல்வேறு இடங்களில் இருந்து அனைத்து தற்காலிக தளங்களையும் அகற்றியதை நீர்வளத்துறை சமீபத்தில் உறுதிப்படுத்தியது.

மேலும் என்.எஸ்.கே. நகர், மற்றும் உள்வட்ட சாலை பாலத்தில் உள்ள தற்காலிக தரைப்பாதைகள் அகற்றப்பட்டன. குப்பைகள் அகற்றப்பட்டு, கூவம் ஆற்றின் கரைக்கு மாற்றப்பட்ட தற்கான புகைப்பட ஆதாரங்களையும் சமர்ப்பித்தது. அதன் அடிப்படையில் தேசிய பசுமை தீர்ப்பாயம் இந்த வழக்கை முடித்தது. தேசிய நெடுஞ்சாலை துறைக்கு தேவையான போது மட்டுமே தற்காலிக நடைபாதைகள் மற்றும் 'பைலிங்' ரிக்குகளை அமைக்க அனுமதித்தது.

# பெரம்பூரில் தண்டவாளத்தை கடந்தபோது ரெயில் மோதி முதியவர் பலி

பெரம்பூர், ஜன.25

பெரம்பூர் ரெயில் நிலையத்தில் உள்ள முதல் நடைமேடை அருகே இன்று காலை முதியவர் ஒருவர் தண்டவாளத்தை கடக்க முயன்றார். அப்போது ஜோலார்பேட்டையில் இருந்து சென்ட்ரல் நோக்கி வந்த எக்ஸ்பிரஸ் ரெயில் முதியவர் மீது மோதியது. இதில் அவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

அவருக்கு சுமார் 65 வயது இருக்கும். அவர் யார்? எந்த பகுதியை சேர்ந்தவர் என்பது குறித்து பெரம்பூர் ரெயில்வே போலீசார் விசாரித்து வருகிறார்கள்.

# குடியரசு தின விழா சென்னையில் பாதுகாப்பு பணியில் 15 ஆயிரம் போலீசார்



சென்னை, ஜன.25

நாடு முழுவதும் வருகிற 26ந் தேதி குடியரசு தின விழா கொண்டாடப்பட உள்ளது.

இதையொட்டி நாடு முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது. தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் போலீஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் போலீஸ் கமிஷனர் அருண் உத்தரவின் பேரில் கூடுதல் கமிஷனர்கள், இணை கமிஷனர் துணை கமிஷனர்கள் உள்ளிட்டோர் பாதுகாப்பு பணிகளை மேற்பார்வையிட வலியுறுத்தப்பட்டுள்ளது.

சென்னை மாநகர் முழுவதும் 15 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அனைத்து லாட்ஜுகள் தங்கும் விடுதிகள் ஆகியவற்றில் போலீசார் சோதனை மேற்கொண்டு வருகிறார்கள். நாளை முதல் 2 நாட்களும் இந்த சோதனை தீவிரப்படுத்தப்பட உள்ளது. சந்தேகத்துக்கிடமாக தங்கி இருப்பவர்களை பிடித்து போலீசார் விசாரணை நடத்தியும் வருகிறார்கள்.

குடியரசு தினத்தை ஒட்டி அனைத்து மாநிலங்களிலுமே விமானநிலையங்கள் உஷார் படுத்தப்பட்டு உள்ளன. அந்த வகையில் சென்னை விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

மத்திய பாதுகாப்பு படையினருடன் உள்ளூர் போலீசாரும் பாதுகாப்பு பணியை மேற்கொண்டு வருகிறார்கள். விமான நிலையத்தில் வாகனங்கள் நிறுத்துமிடம் உள்பட அனைத்து பகுதிகளிலும் பலத்த சோதனை நடைபெற்று வருகிறது. வெளி மாநிலங்கள் வெளி நாடுகளில் இருந்து வரும் பயணிகளின் உடைமைகள் எப்போதும் இல்லாத வகையில் முழுமையாக சோதனைக்கு உட்படுத்தப்பட்டு இருக்கிறது.

சென்னை மாநகர் மட்டுமின்றி புறநகர் பகுதிகளிலும் வாகன சோதனை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. வணிக வளாகங்கள், வழிபாட்டுத் தலங்கள் உள்பட பொதுமக்கள் கூடும் பஸ் நிலையங்கள் ரெயில் நிலையங்களிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து போலீசார் இரவுபகல் பாராமல் வாகன சோதனையில் ஈடுபடவும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது. சந்தேகத்துக்கிடமான இடங்கள் மற்றும் ரெயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள் ஆகியவற்றில் வெடி குண்டு நிபுணர்களுடன் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. சென்னை மட்டுமின்றி அனைத்து பகுதிகளிலும் போலீசார் உஷாராக இருக்க வேண்டும் என உயர் போலீஸ் அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# வீட்டு மனைகளுக்கு ஒப்புதல் வழங்க ரூ.20 ஆயிரம் லஞ்சம்: நகராட்சி அதிகாரி அதிரடி கைது



பரமக்குடி, ஜன.25

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி நகராட்சியில் பதிவு பெற்ற என்ஜினீயராக பாரதிகண்ணன் என்பவர் பணியாற்றி வருகிறார். இவர் தனது வாடிக்கையாளருக்கு சொந்தமாக பரமக்குடியில் உள்ள நான்கு வீட்டு மனைகளுக்கு நகராட்சியில் திட்ட ஒப்புதல் பெறுவதற்கு கட்டணமாக ரூ.76 ஆயிரத்து 850ஐ கடந்த வாரம் செலுத்தி இருந்தார்.

இந்த நிலையில் இதுதொடர்பாக நகராட்சியில் நகரமைப்பு திட்ட அலுவலராக பணிபுரியும் பர்குணன் என்பவரை சந்தித்து பாரதிகண்ணன் விவரம் கேட்டார். அப்போது ஒரு வீட்டு மனைக்கு ரூ.5 ஆயிரம் வீதம் நான்கு வீட்டுமனைகளுக்கு மொத்தம் ரூ.20 ஆயிரம் லஞ்சமாக தர வேண்டும் என்று கூறியுள்ளார்.

அதற்கு என்ஜினீயர் பாரதி கண்ணன், நகராட்சிக்கு கட்ட வேண்டிய அரசு பணத்தை முழுவதும் செலுத்தி உள்ளேன். ஆகையால் ரூ.20 ஆயிரம் லஞ்சம் கொடுக்க முடியாது என்று திட்டவட்டமாக கூறியுள்ளார்.

ஆனாலும் நகராட்சி அதிகாரி பர்குணன் லஞ்சம் கொடுத்தால் மட்டும் அடுத்த கட்ட பணிகள் நடக்கும் என்றும், திட்ட ஒப்புதல் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதையடுத்து வேறு வழியின்றி தவித்த பாரதி கண்ணன் லஞ்சம் கொடுக்க ஒப்புக்கொண்டு விரைவில் அதற்கான ஏற்பாடுகளை செய்வதாக உறுதி அளித்து சென்றார்.

இருந்தபோதிலும் லஞ்சம் கொடுக்க விரும்பாத பாரதி கண்ணன், இது குறித்து ராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் புகார் செய்தார்.

இதனைத் தொடர்ந்து லஞ்ச ஒழிப்பு போலீசாரின் அறிவுரைப்படி, இன்று காலை 'கூகுள்பே' மூலமாக நகராட்சி அதிகாரி பர்குணன் செல்போன் எண்ணிற்கு ரூ.20 ஆயிரம் லஞ்சப்பணத்தை அனுப்பினார்.

அப்போது லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் லஞ்சம் பெற்ற பர்குணனை செல்போனுடன் கையும், களவுமாக பிடித்து கைது செய்தனர். தொடர்ந்து அவரிடம் அதிரடியாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

மேலும் இதுபோன்று வேறு யாரிடமாவது ஆன்லைன் பரிவர்த்தனை மூலம் லஞ்சம் பெற்றுள்ளாரா? என்று விசாரணையை தொடங்கியுள்ள போலீசார் அவரது வீட்டிலும் சோதனை நடத்த முடிவு செய்துள்ளனர்.

பரமக்குடி நகராட்சியில் லஞ்சம் வாங்கிய அதிகாரி கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# காய்ச்சல் உள்ளிட்ட நோய்களால் பாதிப்பு கடலூர் அரசு மருத்துவமனையில் குவிந்த நோயாளிகள்

கடலூர், ஜன.25

கடலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வழக்கத்தை விட அதிக அளவில் பனிமூட்டம் இருந்து வந்த நிலையில், சில நாட்களாக தொடர் மழையும் பெய்தது.

இதன் காரணமாக கடலூர் மாவட்டம் முழுவதும் பருவநிலை மாற்றம் ஏற்பட்டு வரும் நிலையில், பொங்கல் பண்டிகை போகி அன்று அதிகளவில் பொருட்கள் எரிய வைத்ததால் மேலும் பாதிப்பு அதிகரித்து காணப்பட்டது. இந்த நிலையில் கடலூர் மாவட்டம் முழுவதும் தற்போது காய்ச்சல், சளி, இருமல் உள்ளிட்ட நோய்கள் அதிகரித்து காணப்பட்டு வருகின்றன இதன் காரணமாக கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் இன்று காலை வழக்கத்தை விட அதிக அளவில் பொதுமக்கள் குவிந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் சிறுவர்கள் கைக்குழந்தைகள் உள்ளிட்டவர்களும் அதிக அளவில் பாதிப்படைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மாவட்டம் முழுவதும் ஆங்காங்கே அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், ஆரம்பசுகாதார நிலையங்களிலும் வழக்கத்தை விட அதிக அளவில் பொதுமக்கள் நேரில் சென்று சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த நிலையில் கடலூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் எந்தெந்த பகுதிகளில் அதிகளவில் இதுபோன்ற காய்ச்சல் உள்ளிட்ட நோய்களால் பொதுமக்கள் பாதிப்படைந்து காணப்படுகின்றதோ அதனை கண்டறிந்து அங்கு சிறப்பு முகாம்கள் ஏற்படுத்தி நோய் பரவலை கட்டுப்படுத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதன் காரணமாக கடலூர் அரசு மருத்துவமனை இன்று காலை முதல் பரபரப்பாக காணப்பட்டது.

# ஆன்லைன் ரம்மி விளையாட்டில் ரூ.17 லட்சத்தை இழந்ததால் தீயணைப்பு வீரர் தற்கொலை: விசாரணையில் தகவல்

நாகர்கோவில், ஜன.25

நெல்லை மாவட்டம் ரெட்டியார்பட்டியை சேர்ந்தவர் கருப்பசாமி (வயது 29). இவர் நாகர்கோவில் தீயணைப்பு துறையில் வேலை பார்த்து வந்தார். நாகர்கோவிலில் வாடகை வீட்டில் அவரது மனைவி மகேஸ்வரியுடன் வசித்து வந்தார். கடந்த 2 நாட்களுக்கு முன்பு வீட்டில் இருந்து கருப்பசாமி வெளியே சென்று வருவதாக கூறி விட்டு சென்றார்.

இந்த நிலையில் திருப்பதிசாரம் டோல் கேட் அருகே ரெயில்வே தண்டவாளத்தில் ரெயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார். இதை யடுத்து ரெயில்வே போலீசார் அவரது உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆசாரிபள்ளம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். கருப்பசாமி தற்கொலைக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

முதற்கட்ட விசாரணையில் கடன் தொல்லை காரணமாக தற்கொலை செய்து இருப்பது தெரியவந்தது. இந்த நிலையில் தொடர்ந்து நடத்திய விசாரணையில் அவர் ஆன்லைன் ரம்மி விளையாட்டில் லட்சக்கணக்கில் பணத்தை இழந்ததில் கருப்பசாமி தற்கொலை செய்து இருப்பது தெரியவந்துள்ளது.

நாகர்கோவில் ரெயில் நிலையத்திற்கு வந்த முன்னாள் டி.ஜி.பி. சைலேந்திரபாபு தீயணைப்பு வீரர் கருப்பசாமி தற்கொலை தொடர்பாக வீடியோ ஒன்று வெளியிட்டுள்ளார். அந்த வீடியோவில் கூறியிருப்பதாவது:

நாகர்கோவிலை சேர்ந்த தீயணைப்பு வீரர் கருப்பசாமி ரம்மி விளையாட்டில் ரூ.17 லட்சம் தொலைத்துள்ளார். இதனால் ரெயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். எனவே தங்களது குழந்தைகள், கல்லூரியில் படிக்கலாம், வேலை பார்த்துக் கொண்டிருக்கலாம், அவர்கள் ரம்மி விளையாடினால் அதை கண்டுபிடித்து அவர்களுக்கு அறிவுரைகளை கூறவேண்டும்.

கவுன்சிலிங் கொடுக்க வேண்டும். ரம்மி விளையாட்டினால் பணத்தை மட்டுமின்றி ஆளை இழக்க நேரிடும். எனவே ரம்மி விளையாடிக்கொண்டிருப்பவர்கள் உடனடியாக அதிலிருந்து வெளியேவர வேண்டும். உங்களுக்கு பணம் கிடைக்காது. ஒட்டுமொத்த பணத்தையும் இழக்க நேரிடும். எனவே ரம்மி விளையாடி கொண்டிருப்பவர்கள் உடனடியாக அந்த விளையாட்டை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு கூறியுள்ளார்.

# இலங்கைக்கு ராணுவத்தை அனுப்பி தமிழர்களை கொன்றது ராஜதந்திரமா? காங். தலைவருக்கு மதுரை ஆதீனம் கேள்வி





மதுரை, ஜன.25

நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 129வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை ஜான்சி ராணி பூங்காவில் உள்ள அவரது சிலைக்கு மதுரை ஆதீனம் மாலை அணிவித்து மரியாதை செய்தார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

"நமது பாரத நாடு மதச்சார்பற்ற நாடு, எல்லோரும் அவரவர் வழிபாட்டில் சரியாக இருக்க வேண்டும். மற்றவர்கள் வழிபாட்டில் தகராறு செய்யக்கூடாது. கச்சத்தீவை இலங்கைக்கு கொடுத்தது ராஜதந்திரம் என காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை பேசியுள்ளார். அது அவருக்கு ராஜதந்திரமாக இருக்கலாம். தமிழர்களை கொன்றது தான் ராஜ தந்திரமா? லட்சக்கணக்கான தமிழர்களை கொன்று குவித்தார்கள்.

அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி தானே தமிழர்களை இந்திய ராணுவத்தை அனுப்பி கொன்றது. இது ராஜ தந்திரமா? வெளிநாட்டில் இருந்து வந்தவர்களும் நம் சகோதரர்கள் தான். மத விவகாரத்தில் எல்லோரும் எல்லாவற்றையும் அனுசரித்து தான் செல்ல வேண்டும்.

கச்சத்தீவு கொடுத்ததை எப்படி வாங்க முடியும்? கொஞ்சம் கொஞ்சமாக தான் அதை செய்ய முடியும். ஒரு நாட்டிற்கு தாரை வார்த்து கொடுத்ததை சுலபமாக வாங்க முடியுமா? 60 வருடங்களுக்கு முன்பே கொடுத்து விட்டார்கள். 10 வருடமாக தான் மோடி பிரதமராக உள்ளார். கொஞ்சம் கொஞ்சமாக தான் செய்ய முடியும். கச்சத்தீவை திரும்ப பெற்று விடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது"

இவ்வாறு அவர் கூறினார்.

# திருப்பூரில் சத்துணவு ஊழியர்கள் உண்ணாவிரத போராட்டம்



திருப்பூர், ஜன.25

தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் சார்பில் திருப்பூர் கலெக்டர் அலுவலகம் முன்பாக உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் தனலட்சுமி தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தில், தமிழகம் முழுவதும் சத்துணவு மையங்களில் ஏற்பட்டுள்ள காலி பணியிடங்களை சமூகநீதி கொள்கைகளுக்கு எதிராகவும் பெண்கள் நலனுக்கு எதிராகவும் 3,000 தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யும் அரசாணையை ரத்து செய்ய வேண்டும்.

ஏற்கனவே நடைமுறையின் படி சிறப்பு கால முறை ஊதியத்தில் நியமனம் செய்ய வேண்டும். சிறப்பு காலமுறை ஊதியம் பெறுகின்ற வருவாய் கிராம உதவியாளர்களுக்கு வழங்குவதைப் போல அகவிலைபடியுடன் கூடிய மாதாந்திர ஓய்வூதியம் 6750 ரூபாய் குடும்ப ஓய்வூதியமாக வழங்க வேண்டும். காலை சிற்றுண்டி உணவு வழங்கும் திட்டத்தை சத்துணவு ஊழியர்கள் மூலம் அமல்படுத்த வேண்டும். அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போல் பெண் சத்துணவு ஊழியர்களுக்கு மகப்பேறு விடுப்பு 12 மாதம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு உறுப்பினர் சந்திர கலா, முன்னாள் மாவட்ட பொருளாளர் மகேந்திர பூபதி , மாவட்ட செயலாளர் மோகன சுந்தரராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# திருவாரூர்: மின்சாரம் தாக்கி தாய், மகன் பலி

திருவாரூர், ஜன.25

திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி காவல் சரகம் அபிவிருத்தீஸ்வரம் காளியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் கந்தசாமி. இவரது மனைவி ராஜலட்சுமி (வயது 55). கந்தசாமி ஏற்கனவே இறந்து விட்டார்.

இந்ததம்பதிக்கு 2 மகன், 3 மகள்கள் உள்ளனர். இதில் இரண்டு மகள்களுக்கு ஏற்கனவே திருமணம் ஆகிவிட்டது. ஒரு மகன் ஏற்கனவே இறந்து விட்டார்.

இவரது மகள் மஞ்சுபிரியா குடவாசலில் ஒரு டெய்லர் கடையில் பணிபுரிந்து வருகிறார். மகன் பிரசன்னா எலக்ட்ரீசியனாக வேலை பார்த்து வந்தார்.

இவர்கள் 3 பேரும் திருவாரூர் அருகே அபிவிருத்தீஸ்வரம் காளியம்மன் கோவில் தெருவில் ஒரு ஓட்டு வீட்டில் குடியிருந்து வந்தனர்.

இந்நிலையில் மஞ்சுபிரியா வேலைக்கு சென்றுவிட்டு மாலையில் வீடு திரும்பினார்.

அப்போது வீட்டில் தாய் ராஜலட்சுமி, தம்பி பிரசன்னா ஆகிய இருவரும் சுவற்றில் சாய்ந்த நிலையில் கிடந்துள்ளனர்.

இதைப் பார்த்த மஞ்சுபிரியா ஓடிச்சென்று தனது தாயை தொட்டுள்ளார். அப்போது மஞ்சு பிரியாவை மின்சாரம் தாக்கியுள்ளது. இதைத் தொடர்ந்து அவர் அலறினார். அவரது அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் விரைந்து வந்து அவரை மீட்டனர்.

பின்னர் மின்சாரம் தாக்கி ராஜலட்சுமி, பிரசன்னா ஆகியோர் இறந்து கிடப்பது தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து கொரடாச்சேரி போலீசுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் விரைந்து வந்து தாய், மகன் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது தொடர்பாக மஞ்சுபிரியா கொரடாச்சேரி போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் இன்ஸ்பெக்டர் சிவகுமார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

மின்சாரம் தாக்கி தாய் மற்றும் மகன் இருவரும் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# இளம்பெண் தூக்குப்போட்டு தற்கொலை கள்ளக்காதலனுக்கு போலீஸ் வலைவீச்சு

பல்லடம், ஜன.25

நெல்லை மாவட்டம் திசையன்விளையைச் சேர்ந்தவர் சிவரஞ்சித் (வயது27).

இவரது மனைவி முத்துலட்சுமி (23). இவர்களுக்கு 3 வயதில் ஒரு குழந்தை உள்ளது.

இவர்கள் தற்போது திருப்பூர் மாவட்டம் பொங்கலூரை அடுத்த சோழியப்பகவுண்டன் புதூர் என்ற பகுதியில் குடியிருந்து வேலைக்கு சென்று வந்தனர். இந்த நிலையில் முத்துலட்சுமிக்கு திசையன்விளை பகுதியைச் சேர்ந்த அஜித் (24) என்பவருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

இது நாளடைவில் கள்ளக்காதலாக மாறியது. இதனைத் தொடர்ந்து அஜித் முத்துலட்சுமியை போனில் அழைத்து தன்னுடன் வாழ வருமாறு வற்புறுத்தி உள்ளார்.

இதனால் கோபம் அடைந்த முத்துலட்சுமி, அஜித்துடன் பேசுவதை தவிர்த்து வந்துள்ளார்.

இந்த நிலையில் அஜித் மீண்டும் முத்துலட்சுமிக்கு போன் செய்து தன்னுடன் வாழ வரவில்லை என்றால் நாம் இருவரும் சேர்ந்து எடுத்த புகைப்படத்தை உனது கணவருக்கு அனுப்பி விடுவேன் என மிரட்டியுள்ளார்.

அதன்பின் இருவரும் இருக்கும் போட்டோவை முத்துலட்சுமியின் கணவருக்கு அனுப்பி வைத்ததாக தெரிகிறது. இதனால் அவர்களது குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டுள்ளது.

இதில் மனமுடைந்த முத்துலட்சுமி வீட்டில் யாரும் இல்லாத போது தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இதுகுறித்து அறிந்ததும் அவினாசிபாளையம் போலீசார் அங்கு சென்று, முத்துலட்சுமியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இது குறித்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து அஜித்தை வலைவீசி தேடி வருகின்றனர்.

# காஞ்சிபுரம் மக்களின் 25 ஆண்டு கால கோரிக்கை நிறைவேறுகிறது புதிய பஸ் நிலையம்

காஞ்சிபுரம், ஜன.25

காஞ்சிபுரம் கோவில் நகரமாக உள்ளது. இங்குள்ள வரதராஜ பெருமாள்கோவில், காமாட்சி அம்மன் கோவில் சங்கர மடம் பல்வேறு சிறப்புகளை கொண்டது. இங்குள்ள பட்டுச்சேலைகளும் தின சிறப்பு வாய்ந்தது.

இதனால் காஞ்சிபுரத்திற்கு தினந்தோறும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் வெளிமாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்து ஏராளமானோர் வந்து செல்கிறார்கள். மறைந்த முன்னால் முதலமைச்சர் அண்ணாவின் நினைவு இல்லமும் இங்கு உள்ளது.

இத்தனை சிறப்பு வாய்ந்த காஞ்சிபுரத்தில் போதிய வசதிகளுடன் பஸ்நிலையம் என்ற குறை கடந்த 25 ஆண்டுக்கும் மேலாக நிலவி வருகிறது. தற்போது காஞ்சீபுரத்தின் மையப்பகுதியான காமராஜ் சாலையில் பஸ் நிலையம் அமைந்துள்ளது. சுமார் 7 ஏக்கர் பரப்பளவில் உள்ள பஸ் நிலையம், சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு அப்போது இருந்த போக்குவரத்து மற்றும் மக்கள் தொகையின் அடிப்படையில் கட்டப்பட்டது. தற்போது தினமும் 350 பஸ்கள் இங்கிருந்து திருப்பதி, சித்தூர், பெங்களூர், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு இயக்கபட்டு வருகிறது.

இந்த நிலையில் காஞ்சிபுரம் மற்றும் அதனை சுற்றி உள்ள ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம், படப்பை உள்ளிட்ட பகுதிகள் தொழிற்சாலைகளில் வேகமாக வளர்ச்சி அடைந்து உள்ளன. மேலும் மக்கள்தொகை பெருக்கமும் அதிகரித்து உள்ளது. தற்போது காஞ்சீபுரம் மாநராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில் பஸ்நிலையம் மட்டும் அதே பகுதியில் செயல்பட்டு வருகிறது. அனைத்து பஸ்களும் நகரத்தின் மையபகுதிக்கு வந்து செல்வதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வந்தன.

இதையடுத்து காஞ்சிபுரத்தில் நவீன வசதியுடன் புதிய பஸ்நிலையம் அமைக்க வேண்டும் என்று அப்பகுதிமக்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதைத்தொடர்ந்து புதிய பஸ் நிலையம் அமைப்பதற்குதேவையான இடத்தை தேர்வு செய்யும் பணியில் அதிகாரிகள் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் தற்போது காஞ்சிபுரம் பொன்னேரி கரை அருகே சுமார் 19 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு உள்ளது. அந்த இடத்தில் நவீன வசதியுடன் புதிய பஸ் நிலையம் அமைப்பதற்கு ரூ. 38 கோடி நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. பஸ்நிலைய வளாகத்தின் ஒரு பகுதியில் போக்குவரத்து பணிமனையும் அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இதனால் காஞ்சிபுரம் நகரமக்களின் 25 ஆண்டு கனவு விரைவில் நிறைவேற உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து காஞ்சிபுரம் மாநகராட்சி அதிகாரிகள் கூறும்போது, காஞ்சிபுரத்தில் புதிய பஸ் நிலையம் அமைக்க பல ஆண்டுகளாக பல்வேறு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வந்தது. ஆனால் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படாமல் தடைப்பட்டு வந்தன. தற்போது தகுந்த இடம் தேர்வு செய்யப்பட்டு நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டு இருக்கிறது. எனவே விரைவில் புதிய பஸ் நிலைய கட்டுமான பணிகள் தொடங்கப்படும் என்றனர்.

# மனைவியை சரமாரியாக வெட்டிய கணவன் கைதுக்கு பயந்து தற்கொலை

தளி, ஜன.25

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை கோட்டைவாசல் பகுதியில் வசித்து வருபவர் ராமசாமி (55). இவர் கட்டிட மேஸ்திரியாக வேலை செய்து வந்தார்.

இவரது மனைவி முனியம்மாள் (40). இவர் தேன்கனிக்கோட்டை பஸ் நிலையத்தில் பெட்டிக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறார். இவர்களுக்கு 2 மகன்களும், ஒரு மகளும் உள்ளனர். இதில் 3 பேருக்கும் திருமணமாகி தனித்தனியே வசித்து வருகின்றனர்.

முனியம்மாவின் நடத்தையில் சந்தேகப்பட்டு ராமசாமி அவ்வப்போது அவரிடம் தகராறில் ஈடுபட்டு வந்துள்ளார் என்பது தெரிகிறது.





இந்த நிலையில் இன்று காலை மீண்டும் இருவருக்கும் இடையே கடும் தகராறு ஏற்பட்டுள்ளது. நடத்தையில் சந்தேகப்பட்டு மனைவியிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். ஒரு கட்டத்தில் ஆத்திரம் அடைந்த ராமசாமி கத்தியால் முனியம்மாவை சரமாரியாக வெட்டி உள்ளார். இதில் அவருக்கு தலை, கை, கால், வயிறு உள்ளிட்ட பல இடங்களில் வெட்டு காயம் விழுந்துள்ளது.

படுகாயங்களுடன் அலறியபடி முனியம்மாள் வீட்டை விட்டு வெளியே தெருவுக்கு ஓடிவந்துள்ளார். அக்கம் பக்கத்தினர் முனியம்மாவை மீட்டு தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

அதே நேரத்தில் இந்த விவகாரம் வெளியே தெரிந்ததால் போலீசார் தன்னை கைது செய்து விடுவார்கள் என்ற அச்ச உணர்வில் ராமசாமி தனது வீட்டிற்குள் சென்று தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இது குறித்து அறிந்த தேன்கனிக்கோட்டை போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று உயிரிழந்த ராமசாமியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பலத்த காயங்களுடன் முனியம்மாள் தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த சம்பவம் குறித்து தேன்கனிக்கோட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# டெல்டாவில் 2வது நாளாக மத்திய குழுவினர் ஆய்வு

தஞ்சாவூர், ஜன.25

தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை மாவட்டங்களில் நடப்பு ஆண்டு 10.5 லட்சம் ஏக்கரில் சம்பா, தாளடி சாகுபடிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த ஒரு வார காலமாக அறுவடை பணி முழு வீச்சில் நடந்து வரும் நிலையில் பருவம் தவறிய மழை மற்றும் அதிக அளவிலான பனிப் பொழிவு காரணமாக அறுவடை பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.



மேலும் விவசாயிகள் அறுவடை செய்த நெல்மணிகளை உலர்த்த முடியாமலும், விற்பனை செய்ய முடியாமலும் பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் கொள்முதல் நிலையங்களில் நெல்மணிகளை கொண்டு வந்து குவித்து வைத்துள்ளனர்.

நெல்லின் ஈரப்பதத்தை அதிகரித்து அனைத்து நெல்மணிகளையும் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தொடர்ந்து விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் நெல்லின் ஈரப்பதத்தை 17 சதவீதத்தில் இருந்து 22 சதவீதமாக அதிகப்படுத்தி கொள்முதல் செய்ய அனுமதிக்க வேண்டும் என தமிழக அரசு, மத்திய அரசுக்கு கடிதம் எழுதியது.

இதனைத்தொடர்ந்து டெல்டா மாவட்டங்களில் ஆய்வு செய்வதற்காக மத்தியக் குழு நேற்று தஞ்சை வந்தது.

திருச்சியில் இருந்து தஞ்சை வந்த மத்தியக்குழுவில் மத்திய உணவு துறையின் சேமிப்பு மற்றும் பிரிவு உதவி இயக்குனர்கள் நவீன், ப்ரீத்தி, தொழில்நுட்ப அலுவலர்கள் ராகுல், அபிஷேக் பாண்டே ஆகிய 4 பேர் இடம் பெற்று உள்ளனர்.

இவர்களுடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக இயக்குனர் அண்ணாதுரை, தஞ்சை மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மேலாளர் (தரக்கட்டுப்பாடு) செந்தில், தஞ்சை மண்டல மேலாளர்(பொறுப்பு) கார்த்திகை சாமி, வேளாண்மை இணை இயக்குனர் வித்யா ஆகியோரும் உடன் வந்தனர்.

முதல் கட்டமாக மத்தியக்குழுவினர் தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு தாலுகாவில் உள்ள கக்கரையில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சென்று ஆய்வு செய்தனர்.

பின்னர் அவர்கள் நெல்லின் ஈரப்பதம் எவ்வளவு உள்ளது? என்பதையும் அதற்கான கருவி மூலம் பரிசோதனை செய்தனர். பின்னர் அங்கிருந்த விவசாயிகளிடம் பாதிப்புகள் குறித்து கேட்டறிந்தனர். அதனைத்தொடர்ந்து புதூர், தெலுங்கன்குடிக்காடு, புலவன் காடு, பாப்பாநாடு உள்ளிட்ட பகுதியில் உள்ள நேரடி நெல்கொள்முதல் நிலையங்களிலும் ஆய்வு செய்தனர்.

இதைத் தொடர்ந்து இன்று 2வது நாளாக மத்திய குழுவினர் திருவாரூர் மாவட்டம் பூவாநத்தம் கிராமத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல்லின் ஈரப்பதம் குறித்து ஆய்வு செய்தனர்.

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல்மணிகளை கொள்முதல் நிலைய ஊழியர்கள் மத்திய குழுவினரிடம் எடுத்து காண்பித்தனர். இதைத் தொடர்ந்து மத்திய குழுவினர் நெல்லின் ஈரப்பதம் குறித்து ஆய்வு செய்தனர். மத்திய குழுவுடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக இயக்குநர் அண்ணாதுரை மற்றும் கலெக்டர் சாருஸ்ரீ உடன் வந்தனர்.

அப்போது விவசாயிகள் கனமழையால் நெற்பயிர்கள் மழை நீரில் சாய்ந்ததால் நெல்லின் ஈரப்பதம் அதிகரித்துள்ளதாகவும் 22 சதவீதம் ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும் என அதிகாரிகளிடம் கோரிக்கை வைத்தனர்.

தொடர்ந்து திருவாரூர் மாவட்டம் எடமேலையூர், செருமங்கலம், பைங்காநாடு, திருத்துறைப்பூண்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல்லின் ஈரப்பதம் குறித்து மத்திய குழுவினர் ஆய்வு செய்ய உள்ளனர். இதைத் தொடர்ந்து மாலையில் நாகை மாவட்டத்திற்கும் மத்திய குழுவினர் சென்று ஆய்வு செய்ய உள்ளனர்.

# சென்னையில் ரேசன் கார்டில் பெயர் சேர்க்க, நீக்க இன்று சிறப்பு முகாம்

சென்னை, ஜன.25

உணவுப்பொருள் வழங்கல் துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:



ரேசன் கார்டுகளில் பெயர் சேர்ப்பு, நீக்கம் முகவரி மாற்றம், செல்போன் எண் பதிவு மற்றும் மாற்றம் செய்தல் உள்ளிட்ட பணிகளுக்காக சென்னையில் வருகிற 25ந்தேதி (சனிக்கிழமை) சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

சென்னையில் உள்ள உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையில் 12 மண்டல உதவி ஆணையர் அலுவலகங்களில் நடைபெற உள்ள இந்த முகாம்களில் பொது வினியோக திட்டம் தொடர்பான சேவைகள் குறித்தும் கோரிக்கைகள் இருந்தால் அவற்றையும் தெரிவிக்கலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# சிறந்த நடிகருக்கான விருதை நிராகரிக்கிறேன் நடிகர் சுதீப்



கர்நாடக அரசு 2019ம் ஆண்டுக்கான கன்னட திரைப்பட விருதுகளை அறிவித்துள்ளது. இதில் 'பயில்வான்' படத்தில் சிறப்பாக நடித்ததற்காக நடிகர் சுதீப்புக்கு சிறந்த நடிகருக்கான விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அந்த விருதை நிராகரிப்பதாக நடிகர் சுதீப் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் கூறியுள்ளதாவது:

சிறந்த நடிகராக என்னை தேர்ந்தெடுத்ததற்காக விருது குழுவினருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இது எனக்கு கிடைத்த கவுரவமாக கருதுகிறேன். இந்த விருது எனது உழைப்புக்கு கிடைத்த அங்கீகாரம். அதே நேரத்தில் எனது முடிவு உங்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கும். அதாவது நான் கடந்த சில ஆண்டுகளாக விருதுகள் பெறுவதை நிறுத்திவிட்டேன். அதை தொடர்ந்து பின்பற்றி வருகிறேன்.

கலைக்காக தங்களை அர்ப்பணித்து நிறைய பேர் பணியாற்றி வருகிறார்கள். அவர்களில் ஒருவரை தேர்ந்தெடுத்து இந்த விருது வழங்குமாறு கேட்டு கொள்கிறேன். விருது குழுவினர், மாநில அரசிடம் மன்னிப்பு கேட்டு கொள்கிறேன். நீங்கள் எனது முடிவை மதிப்பீர்கள் என்று கருதுகிறேன். நான் எடுத்த முடிவில் பயணிக்க நீங்கள் ஆதரவு அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.




# வைரலாகும் 'லைலா' படத்தின் 2வது பாடல்

தெலுங்கு சினிமாவில் மிகவும் பிரபலமான இளம் நட்சத்திரங்களில் ஒருவர் விஷ்வக் சென். வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடித்து ரசிகர்களால் பாராட்டப்படும் இவரது நடிப்பில் , கடந்த ஆண்டு கேங்க்ஸ் ஆப் கோதாவரி, ஹாமி மற்றும் மெக்கானிக் ராக்கி ஆகிய படங்கள் வெளியாகி இருந்தன.

தற்போது இவர்லைலாஎன்ற படத்தில்நடித்துள்ளார். கதாநாயகியாக அகன்ஷாஷர்மாநடித்திருக்கிறார். முன்புகூறியதுபோலவித்தியாசமான கதாபாத்திரத்தில் நடிப்பதற்கு பேர்போன விஷ்வக் சென் இப்படத்தில் ஆண், பெண் என இரண்டு கதாபாத்திரங்களில் நடித்துள்ளார். சமீபத்தில் இவர் நடித்த ஆண், பெண் கதாபாத்திரத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி வைரலானது.

இந்நிலையில், இப்படத்தின் 2வது பாடலான இச்சுகுண்டம் பேபி வெளியாகி இருக்கிறது. இப்பாடல் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. ராம் நாராயண் இயக்க ஷைன் ஸ்கிரீன்ஸ் பேனரின் கீழ் சாஹு கரபதி தயாரித்த இப்படம் அடுத்த மாதம் 14ம் தேதி வெளியாக உள்ளது.

# 'சங்கராந்திகி வஸ்துன்னம்' பட இயக்குனருடன் இணையும் சிரஞ்சீவி?



பிரபல தெலுங்கு இயக்குனர் அனில் அனில் ரவிபுடி. இவரது இயக்கத்தில் பொங்கல் அன்று வெளியான படம் 'சங்கராந்திகி வஸ்துன்னம்'. இப்படத்தில், வெங்கடேஷ், மீனாட்சி சவுத்ரி, ஐஸ்வர்யா ராஜேஷ் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர்.

இப்படம் வெளியாகி இதுவரை 10 நாட்களை கடந்துள்ளநிலையில், வசூல் ரீதியாகவும் விமர்சனரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. அதன்படி, இப்படம் இதுவரை ரூ. 230 கோடி வசூல் செய்துள்ளது. இப்படத்தையடுத்து அனில் ரவிபுடி, சிரஞ்சீவியை வைத்து தனது அடுத்த படத்தை இயக்க உள்ளதாக கூறப்படுகிறது. மேலும், இப்படத்தை ஷைன் ஸ்கிரீன்ஸ் சினிமாவின் சாஹு கரபதி தயாரிக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது. விரைவில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# ஆஸ்கர் போட்டியில் இந்திய குறும்படம்

சினிமா உலகில் தலைசிறந்த விருது என்பது ஆஸ்கர் விருது ஆகும். இந்தஆஸ்கர்விருதினைஅடைவதேஒவ்வொருதிரைப்படகலைஞர்களின் கனவாக உள்ளது. இந்த ஆஸ்கர் விருது ஆண்டுதோறும் சிறந்த படம், சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்கள் என பல்வேறு பிரிவுகளில் வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் லாஸ் ஏஞ்சல்ஸில் இந்த விழா நடைபெறுகிறது. அதன்படி 97வது ஆஸ்கர் விருது வழங்கும் விழா வரும் மார்ச் 2ம் தேதி நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 2025ம் ஆண்டு ஆஸ்கர் விருதுக்கான இறுதிப் பட்டியலில் சிறந்த லைவ் ஆக்ஷன் குறும்படம் என்ற பிரிவில் இந்தியாவைச் சார்ந்த அனுஜா என்ற குறும்படம் இடம்பிடித்திருக்கிறது. ஆடம் ஜே.கிரேவ்ஸ் தயாரித்துள்ள இப்படத்தை குனீத் மோங்கா, நடிகை பிரியங்கா சோப்ரா உள்ளிட்டோர் தயாரித்துள்ளனர்.

# முகமது ஷமி இன்னும் முழுமையாக குணமடையவில்லை இந்திய முன்னாள் வீரர் கவலை



இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடுகிறது. அதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டி20 போட்டி ஈடன்கார்டனில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இந்திய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி வெற்றி பெற்றது.

முன்னதாக இந்த போட்டியில் காயத்தில் இருந்து மீண்டு 14 மாதங்களுக்கு பிறகு அணிக்கு திரும்பிய வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி களம் காணுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவருக்கு ஆடும் லெவனில் இடம் கிடைக்கவில்லை. இதனால் அவர் இன்னும் முழு உடல்தகுதியை எட்டவில்லையோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.


ஏனெனில் கடந்த ஒருநாள் உலகக்கோப்பையில் காயத்தை சந்தித்த அவர் ஒரு வருடம் கழித்து குணமடைந்து இத்தொடரில் விளையாட தேர்வாகியுள்ளார். ஆனால் முதல்போட்டியிலேயேஅவர்விளையாடாததுரசிகர்களுக்குஏமாற்றமாகஅமைந்தது. மேலும் அவர் சாம்பியன்ஸ் டிராபி தொடருக்கான அணியில் தேர்வாகியுள்ளதால் சில முன்னாள் வீரர்கள் அவரது உடற்தகுதி குறித்து கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்நிலையில் முதல் போட்டியில் ஷமி விளையாடாதது அவர் 100 சதவீதம் பிட்டாக இல்லை என்பதை காண்பிப்பதாக முன்னாள் வீரர் ஆகாஷ் சோப்ரா கவலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "ஒரு போட்டி மட்டுமே முடிந்துள்ளது. 4 போட்டிகள் இருக்கின்றன. முதல் போட்டியில் ஷமி விளையாடவில்லை. அப்படியானால் அவர் 100 சதவீதம் பிட்டாக இல்லை என்பதே ஒரே அர்த்தமாகும். அதற்காக நீங்கள் சொல்லும் எந்த காரணமும் வேலையாகாது. பிட்ச் சுழலுக்கு ஒத்துழைத்தால் நீங்கள் மூன்று ஸ்பின்னர்கள் விளையாடினார்கள் என்று சொல்வீர்கள். ஆனால் அந்த காரணத்தை கொடுக்காதீர்கள். அதை விட்டுவிட்டு ஷமியை விளையாட வையுங்கள்.

அவரைப் பற்றி நான் கொஞ்சம் கவலைப்படுகிறேன். இன்னும் 4 போட்டிகள் இருந்தாலும் அது வேகமாக முடிந்து விடும். அந்த நான்கு போட்டிகளுக்கு பயணம் செய்வதும் பாரத்தை ஏற்படுத்தும். எப்படி இருந்தாலும் அவர் முதல் போட்டியில் விளையாடாததால் இன்னும் முழுமையாக குணமடையவில்லை என்பது தெரிகிறது. அது எனக்கு கொஞ்சம் கவலையை கொடுக்கும் விஷயமாக இருக்கிறது" என்று கூறினார்.

# இந்தியாவுக்கு எதிரான முதல் டி20 போட்டி: தோல்விக்கான காரணம் இதுதான் இங்கிலாந்து கேப்டன் விளக்கம்




இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடிவருகிறது. அதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டி20 போட்டி கொல்கத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த இங்கிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 132 ரன்களில் ஆல்அவுட் ஆனது. அதிகபட்சமாக பட்லர் 68 ரன்கள் அடித்தார். இந்தியா தரப்பில் வருண் சக்ரவர்த்தி 3 விக்கெட்டுகளும், அர்ஷ்தீப்சிங், ஹர்திக் பாண்ட்யா, அக்ஷர்படேல்தலா2விக்கெட்டுகளும்கைப்பற்றினர்.

பின்னர் 133 ரன் இலக்கை நோக்கி ஆடிய இந்திய அணி 12.5 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 133 ரன்கள் சேர்த்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அதிகபட்சமாக அபிஷேக் சர்மா 79 ரன்கள் அடித்தார். இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் இந்தியா 10 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

இந்நிலையில் இந்த போட்டியில் அடைந்த தோல்வி குறித்து பேசிய இங்கிலாந்து அணியின் கேப்டன் ஜாஸ் பட்லர் கூறுகையில், "இந்த போட்டியின் ஆரம்பத்திலேயே மைதானம் பந்து வீச்சிற்கு உதவியது. இந்த மைதானம் பேட்டிங் செய்ய சாதகமான ஒரு மைதானம்தான் ஆனாலும் ஆரம்பத்திலேயே அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுகளை இழந்ததால் எங்களால் அதிலிருந்து மீண்டு வர முடியவில்லை. இது போன்ற ஒரு ரன் குவிக்க வேண்டியமைதானத்தில் தொடக்கத்திலேயே இரண்டு விக்கெட்டுகளை இழந்ததால் நாங்கள் போட்டியின் ஆரம்பத்திலேயே பின்னுக்கு தள்ளப்பட்டோம். அதேபோன்று இந்திய அணியின் வீரர்கள் சிறப்பாக செயல்பட்டதனாலே அவர்களுக்கு இந்த வெற்றி கிடைத்தது. இந்தபோட்டியில் இருந்துகற்றுக்கொண்ட தவறுகளை வைத்து அடுத்த போட்டியில் வலுவாக திரும்புவோம்" என்று கூறினார்.

**NAMADHU DHINA KANI**
**Canara Bank**
**Account: 12002852826 6**
**IFSC code: CNRB0001041**

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.